**SHANMUGAM IAS ACADEMY**

# விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு

## முந்தைய ஆண்டு வினாக்கள் (2020 – 2026)

TNPSC குரூப் 1, 2, 4 மற்றும் பிற தேர்வுகள் · விடைகள் மற்றும் விளக்கங்களுடன்

**33 வினாக்கள்**

www.shanmugamiasacademy.in

ஒவ்வொரு வினாவின் தொடக்கத்திலும் [ ] அடைப்பில் தேர்வுப் பெயரும் ஆண்டும் கொடுக்கப்பட்டுள்ளன. முதலில் விடைகளைப் பார்க்காமல் முயன்று, பின் பகுதியில் உள்ள விடைகளுடன் சரிபார்க்கவும்.

## வினாக்கள்

**1.** AGGS-2021 **கீழ்கண்ட கூற்றுகளில் ருக்மணி லட்சுமிபதி பற்றிய சரியான கூற்று எது?**
**1. இவர் வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டார்**
**2. இவர் சட்டமறுப்பு போராட்டத்தில் கலந்து கொண்டார்**
**3. இவர் ராஜாஜி மந்திரிசபையில் துணை சபாநாயகராக இருந்தார்**
**4. இவர் 1926ல் பாரிசில் நடைபெற்ற அகில உலக பெண்கள் வாக்குரிமை ஒன்றிய மாநாட்டில் கலந்து கொண்டார்**

(A) 1, 2, 3, 4 சரியானவை
(B) 1, 2 சரி; 3, 4 தவறு
(C) 1, 3, 4 சரி; 2 மட்டும் தவறு
(D) 1, 2, 3 சரி; 4 மட்டும் தவறு

**2.** ADGS-2021 **1927-ம் ஆண்டு நவம்பர் 2 ம் தேதி யாருடைய தலைமையின் கீழ் மணிமேகலை சங்கம் தேவதாசி பெண்களின் சங்கக் கூட்டத்தை கோயமுத்தூரில் ஏற்பாடு செய்தது?**

(A) சௌத்ரி. வி. கோணம்பாள்
(B) டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி
(C) திருமதி. அன்னம்மா ராஜா
(D) திருமதி. அன்னி பெசன்ட்

**3.** PSY-2022 **_______ மாநில சமூக நல ஆலோசனை குழுவின் முதல் பெண் தலைவராக நியமிக்கப்பட்டவர்.**

(A) அன்னி பெசன்ட்
(B) முத்துலெட்சுமி
(C) கோவிந்தம்மாள்
(D) சுந்தராம்பாள்

**4.** TNPSC-2022, PTGS-2021 **சென்னை மாகாண சட்டமன்றத்தின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் யார்?**

(A) முத்துலஷ்மி ரெட்டி
(B) சரோஜினி நாயுடு
(C) மூவலூர் ராமாமிர்தம்
(D) ஆனந்தி கோபால் ஜோஷி

**5.** G-2-2022, EO-GIII-2022, CTS (IV Post)-2026 **மெட்ராஸ் மாகாணத்தில் உப்பு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு சிறைக்கு சென்ற முதல் பெண்மணி யார்?**

(A) ருக்மிணி லட்சுமிபதி
(B) துர்காபாய்
(C) சத்யாவதி
(D) ஸ்வரூப் ராணி

**6.** G-1-2022 **டாக்டர். முத்துலெஷ்மி ரெட்டியைப் பொறுத்தவரை பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானது?**

**1. இந்தியாவில் மருத்துவத்தில் பட்டம் பெற்ற முதல் பெண் ஆவார்.**
**2. பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் சட்டமன்ற உறுப்பினராவார்.**
**3. மகாராஜா கல்லூரியில் சேர்ந்த முதல் பெண் மாணவியாவார்.**
**4. சட்ட சபையின் முதல் பெண் தலைவராவார்.**

**(A)** 1, 2 மற்றும் 3
**(B)** 2, 3 மற்றும் 4
**(C)** 1, 3 மற்றும் 4
**(D)** 1, 2, 3 மற்றும் 4

---

**7.** G-1-2022 **ஈரோட்டில் 1921-ம் ஆண்டு ஈ.வே.ரா தமிழ்நாட்டில் கள்ளுக்கடை மறியல் போராட்டம் நடத்தினார். அப்போது இரண்டு பெண்கள் அவருடன் சேர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவ்விரு பெண்கள் தான் கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக முதன் முதலில் கைது செய்யப்பட்டவர்கள். அவர்கள் யார்?**

**(A)** நாகம்மையார் மற்றும் கண்ணம்மாள்
**(B)** நாகம்மையார் மற்றும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
**(C)** கண்ணம்மாள் மற்றும் முத்துலட்சுமி ரெட்டி
**(D)** மணியம்மையார் மற்றும் நாகம்மையார்

---

**8.** G-1-2021 **தமிழகத்தில் 1927 ஆம் ஆண்டு, நீல் உருவ சிலை சத்தியாகிரக போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்மணி (தியாகி) —**

**(A)** கே.பி. சுந்தராம்பாள்
**(B)** பத்மாசனி அம்மாள்
**(C)** முத்துலட்சுமி ரெட்டி
**(D)** செல்வி துர்க்காபாய்

---

**9.** G-1-2021 **எந்த விடுதலைப் போராட்ட பெண்மணி மெட்ராஸ் உப்பு சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டார்?**

**(A)** கே.பி. சுந்தராம்பாள்
**(B)** முத்துலட்சுமி ரெட்டி
**(C)** செல்வி துர்க்காபாய்
**(D)** பத்மாசினி அம்மாள்

---

**10.** ACF-2023 **இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் Dr. முத்துலட்சுமி தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான காரணத்தை எழுது.**

**(A)** மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள்
**(B)** மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்
**(C)** கவுன்சிலின் தீர்மானம் 1921
**(D)** இந்திய அரசு சட்டம் 1935

---

**11.** DEO-2023 **தில்லையாடி வள்ளியம்மை பற்றி சரியான கூற்றைக் கூறுக.**

**(i) தென் ஆப்பிரிக்காவில் இனப் பாகுபாட்டிற்கு எதிராக தனது 16 வயதில் பங்கெடுத்தவர்**
**(ii) காந்தியோடு ஆரம்பகாலத்தில் வேலை செய்தவர்**
**(iii) இனப் பாகுபாட்டிற்கு எதிராக நடந்த போராட்டத்திலேயே இறந்து போனவர்**

**(A)** (i) என்பது சரி
**(B)** (i), (ii) மற்றும் (iii) சரி
**(C)** (i) மற்றும் (ii) மட்டும் சரி
**(D)** (ii) மற்றும் (iii) மட்டும் சரி

---

**12.** CESS-2023 **முத்துலட்சுமி அம்மையார் பற்றிய சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்.**

**(A)** மருத்துவர்
**(B)** பொறியாளர்
**(C)** ஆசிரியர்
**(D)** வழக்கறிஞர்

---

**13.** GEOLOGY-2023 **இராணி வேலுநாச்சியார் திண்டுக்கல் அருகே கோபால நாயக்கரின் பாதுகாப்பில் ______ என்ற இடத்தில் வாழ்ந்து வந்தார்.**

**(A)** கன்னிவாடி
**(B)** தாண்டிக்குடி
**(C)** விருப்பாட்சி
**(D)** ஆயக்குடி

---

**14.** COMBINED RESEARCH ASSISTANT-2023 **வலியுறுத்தல் [A] : வேலுநாச்சியார் இந்தியாவின் 'ஜோன் ஆப் ஆர்க்' என்றழைக்கப்படுகிறார்**
**காரணம் [R] : அவர் மிகச் சிறந்த வீரமிக்கவராக ஆங்கில அரசுக்கு எதிராக போரிட்டார்.**

**(A)** [A] என்பது உண்மை ஆனால் [R] என்பது தவறு
**(B)** [A] மற்றும் [R] இவை இரண்டும் உண்மை மற்றும் [R] என்பது [A]-விற்கான சரியான விளக்கம்
**(C)** [A] என்பது தவறு, [R] என்பது உண்மை
**(D)** [A] மற்றும் [R] இவை இரண்டும் உண்மை ஆனால் [R] என்பது [A]-விற்கான சரியான விளக்கம் அல்ல

---

**15.** HOSTEL SUPERINTENDENT CUM PTO-2024 **அஞ்சலையம்மாள் தமிழகத்தின் ______ பகுதியை சேர்ந்தவர்.**

**(A)** புதுக்கோட்டை
**(B)** கடலூர்
**(C)** திருவாரூர்
**(D)** மதுரை

---

**16.** G4-2024 **தேவதாசி முறை ஒழிப்பு சட்டம் கொண்டு வர டாக்டர். முத்துலட்சுமி அம்மையாருக்கு ஆணிவேராக இருந்த பெண் சீர்திருத்தவாதி**

**(A)** மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
**(B)** அன்னிபெசன்ட் அம்மையார்
**(C)** டாக்டர். தர்மாம்பாள் அம்மையார்
**(D)** நாகம்மையார்

---

**17.** G1-2024 **பின்வருவனவற்றில் அரசு மகப்பேறு மற்றும் கண் மருத்துவமனையில் இந்தியாவின் முதல் பெண் பயிற்சி அறுவை சிகிச்சை நிபுணர் யார்?**

**(A)** ருக்மணி லட்சுமிபதி
**(B)** முத்துலட்சுமி அம்மையார்
**(C)** சரோஜினி நாயுடு
**(D)** மூவலூர் இராமாமிர்தம்

---

**18.** G1-2024 **S. அம்புஜம்மாள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?**
**(i) இவர் 1920-ல் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்**
**(ii) இவர் 1926-ல் மெட்ராஸ் சட்டசபை கவுன்சிலுக்கு நியமனம் செய்யப்பட்டார்**
**(iii) இவர் சென்னையில் பெண்கள் சுதேசி இயக்கத்தை உருவாக்கினார்.**

**(A)** (i) மட்டும்
**(B)** (i) மற்றும் (iii) மட்டும்
**(C)** (i) மற்றும் (ii) மட்டும்
**(D)** (ii) மற்றும் (iii) மட்டும்

**19.** COMBINED TECHNICAL (IV POST)-2024 **அம்புஜம்மாள் பற்றிய பின்வரும் தொடர்களை கவனிக்க:**
**(i) சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டார்**
**(ii) காங்கிரஸின் மூன்றாவது சர்வாதிகாரி எனப்பட்டார்**
**(iii) தமிழ் இலக்கியம் மற்றும் இசைக்காக அரும்பாடுபட்டார்**
**(iv) 1964 ல் அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது**
**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

**(A)** (i), (ii) மற்றும் (iv) சரி (iii) தவறு
**(B)** (i), (iii) மற்றும் (iv) சரி ஆனால் (ii) தவறு
**(C)** (ii), (iii) மற்றும் (iv) சரி ஆனால் (i) தவறு
**(D)** (i), (ii) மற்றும் (iii) சரி (iv) தவறு

**20.** COMBINED TECHNICAL SERVICE (ITI)-2024 **வேலுநாச்சியாருக்கும் அவரது மகளுக்கும் எட்டு ஆண்டுகள் பாதுகாப்பு கொடுத்தவர் யார்?**

**(A)** திண்டுக்கல்லின் கோபால் நாயக்கர்
**(B)** மைசூரின் ஹைதர் அலி
**(C)** பாஞ்சாலங்குறிச்சியின் கட்டபொம்மன்
**(D)** குயிலி என்ற நம்பிக்கைக்குரிய தோழி

**21.** Group 1B&C-2024 **கூற்று [A]: ஆங்கிலேயரை எதிர்த்து போர் புரிந்து வெற்றி பெற்றவர் வேலு நாச்சியார்.**
**காரணம் [R]: வேலுநாச்சியாருக்கு ஹைதர் அலியின் படை உதவி செய்தது.**

**(A)** கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு
**(B)** கூற்று [A] தவறு காரணம் [R] சரி
**(C)** கூற்று [A], காரணம் [R] இரண்டும் சரி மேலும் காரணம் [R] கூற்று [A]-வை சரியாக மெய்ப்பிக்கிறது
**(D)** கூற்று [A], காரணம் [R] இரண்டும் சரி ஆனால் காரணம் [R] கூற்று [A]-வை சரியாக மெய்ப்பிக்கவில்லை

**22.** Group 1B&C-2024 **தமிழக வரலாற்றில் அரியணை ஏறிய முதல் பெண்ணரசி**

**(A)** மங்கம்மாள்
**(B)** வேலு நாச்சியார்
**(C)** ஜான்சிராணி
**(D)** சென்னம்மாள்

**23.** Special Competitive Exam-2025 **"சென்னை மாணவர் மன்றம்", அமைக்க காரணமாக இருந்தவர்**

**(A)** டாக்டர் S. தர்மாம்பாள்
**(B)** டாக்டர் முத்துலட்சுமி
**(C)** பெரியார்
**(D)** C.N. அண்ணாதுரை

**24.** Group 1&1A-2025 **கீழ்க்காண்பவற்றைப் பொருத்துக:**
**(a) சுயாட்சி இயக்கம் – 1. S. அம்புஜ அம்மாள்**
**(b) குடியரசு – 2. அன்னி பெசன்ட்**
**(c) பெண்கள் சுதேசி சங்கம் – 3. முத்துலெட்சுமி ரெட்டி**
**(d) தேவதாசி முறை ஒழிப்பு – 4. ஈ.வெ. ராமசாமி**

**(A)** 2 4 1 3
**(B)** 3 4 2 1
**(C)** 4 3 1 2
**(D)** 3 2 1 4

**25.** Group 4-2025 **கீழ்க்கண்ட கூற்றுகளில் வேலுநாச்சியார் பற்றி எது/எவை சரியானவை?**
**(i) வேலுநாச்சியார் சிவகங்கை அரசரான செல்லமுத்து சேதுபதியின் மகள் ஆவார்.**
**(ii) வேலுநாச்சியாரின் கணவர் நவாபின் படைகளால் கொல்லப்பட்டதால் ஆங்கிலேயரைத் தாக்கும் நோக்கத்துடன் கோபால் நாயக்கர், ஹைதர் அலி ஆகியோருடன் கூட்டணி அமைத்தார்.**
**(iii) வேலுநாச்சியார் நோயுற்று 1790-இல் இறந்தார்.**

**(A)** (ii) மட்டும் **(B)** (i) மற்றும் (iii)
**(C)** (i) மற்றும் (ii) **(D)** (ii) மற்றும் (iii)

---

**26.** CTS (IV Post)-2025 **சரியான விடையைத் தேர்வு செய்க**
**பின்வருவனவற்றுள் K. இராஜகோபாலாச்சாரியின் வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் துணை நின்று வேலூர் பெண்கள் சிறைச்சாலையில் முதல் பெண் அரசியல் கைதியாக அடைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை**

**(A)** ருக்மணி லெட்சுமிபதி **(B)** எஸ். அம்புஜம்மாள்
**(C)** முத்துலெட்சுமி ரெட்டி **(D)** அம்மு சுவாமிநாதன்

---

**27.** CTS (Non IV Post)-2025 **"ஒரு சட்டமன்ற உறுப்பினராக எனது அனுபவம்" என்ற நூலை எழுதியவர்**

**(A)** இராஜ கோபாலாசாரியார் **(B)** டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி
**(C)** ஈ.வி. ராமசாமி **(D)** அண்ணாதுரை

---

**28.** CTS (ITI Post)-2025 **தில்லையாடி வள்ளியம்மை பற்றிய கீழ்கண்ட கூற்றுகளில் சரியான ஒன்றினை தேர்வு செய்க.**
**(i) தில்லையாடி வள்ளியம்மையின் பெற்றோர்கள் மதுரை மாவட்டத்திலுள்ள தில்லையாடி என்ற ஊரைச் சேர்ந்தவர்கள்**
**(ii) தில்லையாடி வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் ஜோகன்னஸ்பர்க் என்ற ஊரில் பிறந்தார்**
**(iii) தில்லையாடி வள்ளியம்மை சுதேசி இயக்கப் போராட்டத்தில் ஆர்வமுடன் கலந்து கொண்டார்**

**(A)** (i) மட்டும் **(B)** (i) மற்றும் (ii) மட்டும்
**(C)** (ii) மட்டும் **(D)** (i) மற்றும் (iii) மட்டும்

---

**29.** CTS (ITI Post)-2025 **சரியாகப் பொருந்தியவற்றை தேர்ந்தெடுக்கவும்:**
**(1) வேலுநாச்சியாரின் படைத்தளபதி – பெரிய மருது**
**(2) இராமநாதபுரி அரசரின் மனைவி – வேலுநாச்சியார்**
**(3) வேலுநாச்சியார் இறந்த ஆண்டு – 1790**
**(4) வேலுநாச்சியாரால் தத்தெடுக்கப்பட்டவர் – குயிலி**

**(A)** (1) மட்டும் **(B)** (3) மட்டும்
**(C)** (2) மற்றும் (4) மட்டும் **(D)** (1) மற்றும் (3) மட்டும்

---

**30.** CTS ITI Level II-2025 **கூற்று [A]: டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் 1926ல் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.**
**காரணம் [R]: நீதிக்கட்சி ஆட்சியில் தான் முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921ல் அங்கீகரித்தது.**

**(A)** [A] தவறு [R] சரி
**(B)** [A] சரி [R] தவறு
**(C)** [A] மற்றும் [R] இரண்டும் தவறு
**(D)** [A] மற்றும் [R] சரியானவை மற்றும் காரணம் [R] கூற்று [A] க்கு சரியான விளக்கமாகும்

---

**31.** CTS ITI Level II-2025 **டாக்டர் முத்துலட்சுமி புற்றுநோய் நிவாரண மருத்துவமனை தொடங்கிய ஆண்டு**

**(A)** 1929
**(B)** 1939
**(C)** 1949
**(D)** 1959

---

**32.** CTS ITI Level II-2025 **கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்**
**(i) டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் சென்னை சட்டமேலவை உறுப்பினராகத் தேர்வு பெற்றார்.**
**(ii) சென்னையில் பெண்களுக்கான ஔவை இல்லத்தை முத்துலட்சுமி அம்மையார் தோற்றுவித்தார்.**
**(iii) பெண்களுக்கு 16 வயதும் ஆடவர்க்கு 21 வயதும் திருமண வயதுகளாக அமைய முத்துலட்சுமி அம்மையார் பரிந்துரை செய்தார்.**
**(iv) இந்திய அரசு இவருக்கு பத்ம விபூஷன் விருதளித்தது.**

**(A)** (iv) மட்டும்
**(B)** (ii) மற்றும் (i) மட்டும்
**(C)** (i), (ii) மற்றும் (iii) மட்டும்
**(D)** (i) மற்றும் (iii) மட்டும்

---

**33.** Group 2A Mains Re-Exam-2026 **கீழ்க்காண்பவற்றுள் தமிழ்நாட்டில் பாப்பா உமாநாத் பற்றிய உண்மையான கூற்றுகள் யாவை?**
**(1) உப்புச் சத்தியாகிரகத்திற்காக ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்ட முதல் தென்னிந்தியப் பெண்மணி**
**(2) துவரிமான் கிராமத்தில் ஓர் குடியானவர் இயக்கத்தினை நிறுவினார்.**
**(3) பொன்மலை பெண்கள் கூட்டமைப்பில் ஒரு அங்கமானார்.**
**(4) 1945-ல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.**

**(A)** (1) மற்றும் (2) சரியானவை
**(B)** (2) மற்றும் (4) சரியானவை
**(C)** (1) மற்றும் (4) சரியானவை
**(D)** (2) மற்றும் (3) சரியானவை

# விடைகள் மற்றும் விளக்கங்கள்

1. **(A) 1, 2, 3, 4 சரியானவை**
ருக்மணி லட்சுமிபதி வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம் (சட்டமறுப்பு இயக்கம்) மூலம் சிறை சென்றார்; 1926 பாரிஸ் சர்வதேச பெண்கள் வாக்குரிமை மாநாட்டில் பங்கேற்றார்; 1937 ராஜாஜி அமைச்சரவைக் காலத்தில் சட்டமன்ற துணை சபாநாயகராக இருந்தார். எனவே நான்கும் சரி.

2. **(B) டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி**
தேவதாசி முறை ஒழிப்புக்காகப் போராடிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தலைமையில், 1927 நவம்பர் 2 அன்று மணிமேகலை சங்கம் கோயம்புத்தூரில் தேவதாசி பெண்களின் கூட்டத்தை நடத்தியது.

3. **(B) முத்துலெட்சுமி**
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 1954-ல் மாநில சமூக நல ஆலோசனை வாரியத்தின் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

4. **(A) முத்துலஷ்மி ரெட்டி**
1926-ல் சென்னை சட்டமன்ற மேலவைக்கு நியமிக்கப்பட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியே சென்னை மாகாணத்தின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர்.

5. **(A) ருக்மிணி லட்சுமிபதி**
வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் (1930) பங்கேற்று கைது செய்யப்பட்ட ருக்மணி லட்சுமிபதி, சென்னை மாகாணத்தில் உப்பு சத்தியாகிரகத்திற்காக சிறை சென்ற முதல் பெண்மணி.

6. **(B) 2, 3 மற்றும் 4**
கூற்று 1 தவறு — இந்தியாவில் மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண் முத்துலட்சுமி ரெட்டி அல்ல (கடம்பினி கங்குலி, ஆனந்திபாய் ஜோஷி அவருக்கு முன்பே பெற்றனர்); எனவே 1-ஐ விலக்கும் விடை (B) மட்டுமே பொருந்தும். அவர் புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் சேர்ந்த முதல் மாணவி, பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் (1926), 1927-ல் சென்னை சட்ட மேலவையின் துணைத் தலைவராகி அவைக்குத் தலைமை தாங்கிய முதல் பெண்.

7. **(A) நாகம்மையார் மற்றும் கண்ணம்மாள்**
1921 ஈரோடு கள்ளுக்கடை மறியலில் பெரியாரின் மனைவி நாகம்மையாரும் அவரது சகோதரி கண்ணம்மாளும் பங்கேற்றனர்; காந்தியடிகள் கூட மறியலை நிறுத்துவது இவ்விருவர் கையில் உள்ளது என்றார்.

8. **(B) பத்மாசனி அம்மாள்**
1927-ல் சென்னையில் நடந்த நீல் சிலை அகற்றும் சத்தியாகிரகத்தில் மதுரையைச் சேர்ந்த பத்மாசனி அம்மாள் பங்கேற்றார்.

9. **(C) செல்வி துர்க்காபாய்**
துர்காபாய் (பின்னாளில் துர்காபாய் தேஷ்முக்) 1930-ல் டி. பிரகாசம் தலைமையில் சென்னையில் நடந்த உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்று சிறை சென்றார்.

**10. (C) கவுன்சிலின் தீர்மானம் 1921**

1921-ல் சென்னை சட்ட மேலவை பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது (இந்தியாவில் முதன்முதலாக); இது பெண்கள் சட்டமன்றத்தில் நுழைய வழிவகுத்து, 1926-ல் முத்துலட்சுமி ரெட்டி நியமிக்கப்படக் காரணமானது.

**11. (B) (i), (ii) மற்றும் (iii) சரி**

தில்லையாடி வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளின் தொடக்ககால சத்தியாகிரகத்தில் 16 வயதில் பங்கேற்று சிறை சென்றார்; சிறையில் ஏற்பட்ட நோயால் 1914-ல் தனது 16-ஆம் வயதிலேயே இறந்தார்.

**12. (A) மருத்துவர்**

முத்துலட்சுமி ரெட்டி சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்ற மருத்துவர்; அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை நிறுவினார்.

**13. (C) விருப்பாட்சி**

1772-ல் காளையார்கோவில் போருக்குப் பின், வேலுநாச்சியார் திண்டுக்கல் அருகே விருப்பாட்சியில் பாளையக்காரர் கோபால நாயக்கரின் பாதுகாப்பில் எட்டு ஆண்டுகள் வாழ்ந்தார்.

**14. (B) [A] மற்றும் [R] இவை இரண்டும் உண்மை மற்றும் [R] என்பது [A]-விற்கான சரியான விளக்கம்**

ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டு 1780-ல் சிவகங்கையை மீட்ட முதல் இந்திய அரசி வேலுநாச்சியார்; அவரது வீரத்தினால் 'வீரமங்கை' என்றும் இந்தியாவின் 'ஜோன் ஆப் ஆர்க்' என்றும் அழைக்கப்படுகிறார்.

**15. (B) கடலூர்**

அஞ்சலையம்மாள் கடலூரைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீராங்கனை; காந்தியடிகள் அவரை 'தென்னாட்டு ஜான்சி ராணி' என்று அழைத்தார்.

**16. (A) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்**

தேவதாசி குடும்பத்தில் பிறந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் தேவதாசி ஒழிப்புக்காகத் தீவிரமாகப் பரப்புரை செய்து, முத்துலட்சுமி ரெட்டியின் சட்ட முயற்சிக்கு வலுவான ஆதரவாக இருந்தார்.

**17. (B) முத்துலட்சுமி அம்மையார்**

1912-ல் மருத்துவப் பட்டம் பெற்ற முத்துலட்சுமி ரெட்டி, சென்னை அரசு மகப்பேறு மற்றும் கண் மருத்துவமனையில் முதல் பெண் பயிற்சி அறுவை சிகிச்சை நிபுணராக (ஹவுஸ் சர்ஜன்) பணியாற்றினார்.

**18. (B) (i) மற்றும் (iii) மட்டும்**

அம்புஜம்மாள் 1920 ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்தார்; சென்னையில் பெண்கள் சுதேசி சங்கத்தை உருவாக்கினார். 1926-ல் சட்ட மேலவைக்கு நியமிக்கப்பட்டவர் முத்துலட்சுமி ரெட்டி; எனவே (ii) தவறு.

**19. (A) (i), (ii) மற்றும் (iv) சரி (iii) தவறு**

அம்புஜம்மாள் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்று சிறை சென்றார்; அப்போராட்டத்தில் காங்கிரஸின் 'மூன்றாவது சர்வாதிகாரி'யாக (போராட்டத் தலைவர்) அறிவிக்கப்பட்டார்; 1964-ல் பத்மஸ்ரீ விருது பெற்றார். (i), (ii), (iv) மூன்றும் சரி என்பதால் விடை (A) மட்டுமே பொருந்தும்.

550/3, Dr Nanjappa Road, Gandhipuram, Coimbatore - 641012
☎ 99941 46662 / 99944 27714

**20.** **(A) திண்டுக்கல்லின் கோபால் நாயக்கர்**

கணவர் முத்துவடுகநாதர் 1772-ல் கொல்லப்பட்ட பின், வேலுநாச்சியாரும் மகள் வெள்ளச்சியும் திண்டுக்கல் அருகே விருப்பாட்சியில் கோபால நாயக்கரின் பாதுகாப்பில் எட்டு ஆண்டுகள் தங்கியிருந்தனர்.

**21.** **(C) கூற்று [A], காரணம் [R] இரண்டும் சரி மேலும் காரணம் [R] கூற்று [A]-வை சரியாக மெய்ப்பிக்கிறது**

ஹைதர் அலி வழங்கிய குதிரைப்படை, காலாட்படை உதவியுடன் வேலு நாச்சியார் 1780-ல் ஆங்கிலேயரைத் தோற்கடித்து சிவகங்கையை மீட்டார். எனவே காரணம் கூற்றைச் சரியாக விளக்குகிறது.

**22.** **(A) மங்கம்மாள்**

மதுரை நாயக்கர் அரசி ராணி மங்கம்மாள் (ஆட்சி சுமார் 1689–1704) தமிழக வரலாற்றில் அரியணை ஏறி ஆட்சி செய்த முதல் பெண்ணரசியாகக் கருதப்படுகிறார்.

**23.** **(A) டாக்டர் S. தர்மாம்பாள்**

சமூக சீர்திருத்தவாதியும் தமிழ் ஆர்வலருமான டாக்டர் S. தர்மாம்பாள் 'சென்னை மாணவர் மன்றம்' அமைய காரணமாக இருந்தார்.

**24.** **(A) 2 4 1 3**

அன்னி பெசன்ட் – சுயாட்சி இயக்கம் (1916); ஈ.வெ.ரா – 'குடியரசு' இதழ் (1925); அம்புஜம்மாள் – பெண்கள் சுதேசி சங்கம்; முத்துலட்சுமி ரெட்டி – தேவதாசி முறை ஒழிப்பு.

**25.** **(A) (ii) மட்டும்**

வேலு நாச்சியார் இராமநாதபுர அரசர் செல்லமுத்து சேதுபதியின் மகள் (சிவகங்கை அல்ல); அவர் 1796-ல் இறந்தார். கணவர் கொல்லப்பட்ட பின் கோபால நாயக்கர், ஹைதர் அலியுடன் கூட்டணி அமைத்தது மட்டுமே சரி.

**26.** **(A) ருக்மணி லெட்சுமிபதி**

ருக்மணி லட்சுமிபதி 1930 வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்று கைது செய்யப்பட்டு, வேலூர் பெண்கள் சிறையின் முதல் பெண் அரசியல் கைதி ஆனார்.

**27.** **(B) டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி**

இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 'My Experience as a Legislator' என்ற நூலை எழுதினார்.

**28.** **(C) (ii) மட்டும்**

வள்ளியம்மை 1898-ல் ஜோகன்னஸ்பர்க்கில் பிறந்தார்; அவரது பெற்றோர் தஞ்சாவூர் பகுதியிலுள்ள (இன்றைய மயிலாடுதுறை மாவட்டம்) தில்லையாடியைச் சேர்ந்தவர்கள். அவர் தென்னாப்பிரிக்காவில் காந்தியின் சத்தியாகிரகத்தில் பங்கேற்றார், சுதேசி இயக்கத்தில் அல்ல.

**29.** **(A) (1) மட்டும்**

மருது சகோதரர்கள் வேலு நாச்சியாரின் படைத்தளபதிகள். அவர் இராமநாதபுர அரசரின் மகள், சிவகங்கை அரசர் முத்துவடுகநாதரின் மனைவி; 1796-ல் இறந்தார்; குயிலி அவரது பெண் படைத்தலைவி, தத்துப்பிள்ளை அல்ல.

**30. (D) [A] மற்றும் [R] சரியானவை மற்றும் காரணம் [R] கூற்று [A] க்கு சரியான விளக்கமாகும்**

1921-ல் நீதிக்கட்சி அரசு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கி தேர்தல் அரசியலில் பங்கேற்க வழிவகுத்தது; இதன் விளைவாக 1926-ல் முத்துலட்சுமி ரெட்டி சென்னை சட்டமன்றத்திற்கு நியமிக்கப்பட்டு இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.

**31. (C) 1949**

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 1949-ல் புற்றுநோய் நிவாரணப் பணியைத் தொடங்கினார்; அதன் விளைவாக அடையாறு புற்றுநோய் மருத்துவமனை உருவானது (1954-ல் செயல்படத் தொடங்கியது).

**32. (C) (i), (ii) மற்றும் (iii) மட்டும்**

முத்துலட்சுமி ரெட்டி சென்னை சட்டமேலவை உறுப்பினராகி, 1930-ல் ஔவை இல்லத்தைத் தொடங்கினார்; திருமண வயதை ஆணுக்கு 21, பெண்ணுக்கு 16 எனப் பரிந்துரைத்தார். அவர் பெற்றது பத்ம பூஷண் (1956), பத்ம விபூஷண் அல்ல.

**33. (D) (2) மற்றும் (3) சரியானவை**

பாப்பா உமாநாத் (1931–2010) ஒரு பொதுவுடைமை இயக்கத் தலைவர்; துவரிமானில் விவசாயிகள் இயக்கத்தை அமைத்து, பொன்மலை மாதர் சங்கத்தில் பணியாற்றினார். அவர் காங்கிரஸில் அல்ல, கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்; உப்பு சத்தியாகிரகக் காலத்தில் அவர் சிறுமி.